23rd January 1965]

திரு. கரு. சீமைச்சாமி: களவாடப்பட்ட எக்ஸ்ரே பிலிம்களினுடைய மதிப்பு என்ன என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அகௌண்டென்ட்-ஜெனரல் கொடுத்த கணக்குப் பிரகாரம், ரூ. 7,185 பெறுமான பிலிம்கள் குறைந்திருக்கின்றன.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி

***77. கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:

சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள மருத்துவக் கல்லூரி எப்பொழுது திருநெல்வேலிக்கு மாற்றப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் இக்கல்லூரிக்குத் தேவையான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டவுடன் அது அங்கு மாற்றப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : " மருத்துவக் கல்லூரிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் " என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தக் கட்டடம் கட்டி முடிக்க எவ்வளவு நாளாகும் என்று அமைச்சர் அவர்கள் கூற முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கொஞ்ச நாள் ஆகும்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவவேண்டும் என்பதற்காகக் கீழ்ப்பாக்கத்திலிருக்கும் மருத்துவக் கல்லூரியை அங்கே கொண்டுபோக வேண்டியது அவசியந்தானா? இங்கேயுள்ள கல்லூரியை இங்கேயே தொடர்ந்திருக்கச் செய்துவிட்டு திருநெல்வேலிப் பகுதியில் புதிய மருத்துவக் கல்லூரி ஒன்றைத் துவக்குவதற்கு வசதி செய்து தரக் கூடாதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: புதிய மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவது பற்றியல்ல இப்பொழுதிருக்கும் கேள்வி. இங்கேயிருக்கக்கூடிய கல்லூரியை மாற்றுவது பற்றித்தான்.

புலவர் கா. கோவிந்தன்: சென்னை நகரிலுள்ள மருத்துவக் கல்லூரியைத் திருநெல்வேலிப் பகுதிக்கு மாற்றுமல் இங்குள்ளதை இங்கேயே நிறுத்திவிட்டு, அங்கே புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தக் கூடாதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இங்குள்ள மருத்துவக் கல்லூரியை மாற்றுவதாகத்தான் தற்போது அரசாங்கம் எடுத்திருக்கின்ற முடிவு. புதிய மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதென்றால் இப்பொழுது இயலாது.